இணைந்த சேவை சுற்றறிக்கை : 03/2014

எனது இல. CS / HR / 13 / II
இணைந்த சேவைகள் பிரிவு
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07

2014.08.20

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய இரண்டாவது மொழித் தேவைப்பாட்டினை பூரணப்படுத்தல் தொடர்பாக மேலும் சலுகை வழங்கல்.**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1681/29 மற்றும் 2010 நவம்பர் மாதம் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைக்குறிப்பின் திருத்தப்பட்ட இல. 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள 14: 3: 4 பிரிவின் (இ) உபபிரிவு தொடர்பாக தங்களது அவதானம் கோரப்படுவதுடன், அப்பிரிவின் மூலம் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கு இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சலுகைக்காலம் 2012.06.30 ஆம் திகதியிலிருந்து 2013.04.02 வரை நீடிப்பதென 2014 ஆகஸ்ட் மாதம் 07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

02. அதற்கமைய 2013/04/02 ஆந் திகதி வரை அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அனைத்து அலுவலர்களும் இரண்டாவது மொழித் தேவைப்பாட்டினை பூரணப்படுத்தாமலேயே தமது சம்பள ஆண்டேற்றங்களை ஈட்டிக்கொள்வதற்கும் மற்றும் குறித்த பதவியுயர்வைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிட்டுகின்றது.

ஒப்பம்/கே. வீ. பீ. எம். ஜே. கமகே
இணைந்த சேவைப் பணிப்பாளர்
நாயகம்